# கிராமதேவதைகள்

கிராமதேவதைகள் தோளில் கை போடும்நண்பர்கள். ஈரோடுக்கு அருகில் இருக்கும் கிராமதேவதை வானத்திலிருந்து குதித்த புராண கதாபாத்திரம் அல்ல. எல்மோர் (1984 ) எனும் மக்கள் பண்பாட்டு அறிஞர் இந்த கிராமதேவதைகளில் பல பெரும்பாலும் அவ்வூரில் பிறந்து வளர்ந்த மனிதர்களாக வாழ்ந்தவர்களின் ஆவியாகவே குறிப்பிடுகிறார்.இது தமிழர்களின் நடுகல் வழிபாட்டின் தொடர்ச்சிதான். டாக்டர் ஆ.சிவசுப்பிரமணியன் களஆய்வின்படி இவை பெரும்பாலும் கொலையில் உதித்த தெய்வங்கள்.நில உடைமைக் கொடுமை, பாலியல் வன்முறை, சாதி மீறிய காதல், கொள்ளையர், காமுகர் ஆகியவற்றிலிருந்து காப்பாற்றும்ு முயற்சியில் இறந்தவர்கள். இவர்கள் இன்னும் ஆவியாக வாழந்து தங்களைக் காப்பதாக நம்பும் தொன்மம் தமிழகத்தில் உண்டு. நாளடைவில் இவர்களைப் புனிதபடுத்தி பெருந்தெய்வங்களுடன் இணைத்து விடும்போக்கும் உள்ளது.இது தவறானதாகும். இப்படி புனிதப்படுத்துவதால் விளிம்புநிலை மக்களின் வீரர்களை மக்களின் வாழ்க்கைக்கு அப்பாற்பட்ட தெய்வங்களாக உயர்த்தி விடுகிறார்கள். பெருமதங்களுடன் இவர்களுக்கு எந்த தொடர்பும் கிடையாது. அப்படி தொடர்பு படுத்தி பெருமதங்களுடன் இணைப்பது என்பது பண்பாட்டு நாசம் என்று நாம் உணர வேண்டும்.

